பக்கங்கள் 25

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 01 புதன்கிழமை 17.09.2025 | அதிர்வு 47

## நாட்டு மக்களின் மனங்களில் மஹிந்த நிலைத்திருப்பாராம்

**மொட்டுக் கட்சி கூறுகின்றது**



“புலிப் பயங்கரவாதிகளுக்கு முடிவு கட்டி நாட்டைப் பாதுகாத்த மஹிந்த ராஜபக்ஷ, மக்களின் மனங்களில் என் 05▶



# தமிழரும் முஸ்லிம்களும் இணைந்து செயற்பட்டால்தான் தலைநிமிரலாம்!

**அஷ்ரப் நினைவுப் பேருரையில் சுமந்திரன் உறுதி**



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

“எதிர்காலத்தில் தமிழ்ச் சமூகமோ முஸ்லிம் சமூகமோ இலங்கையில் தன்மானத்தோடு தலை நிமிர்ந்து வாழ வேண்டுமானால் நாம் இணைந்துதான் செயற் 02▶



**மித்தெனிய ஐஸ் விவகாரம்:**

## சம்பத் மனம்பேரி சரணடையத் தயார்

மித்தெனியவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான ஸ்ரீலங்கா 05▶

## வெளிநாடுகளில் வாழும் இலங்கையர் வாக்களிக்கும் வகையில் சட்ட திருத்தம்

**அமைச்சரவை அனுமதி**



இலங்கையில் நடைபெறும் தேர்தல்களின்போது வெளிநாடுகளில் வாழும் இலங்கைப் பிரஜைகள் வாக்களிப்பதற்கு இடமளிக்கும் வகையில் சட்டம் இயற்றுவது தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசு அவதானம் செலுத்தியுள்ளது.

இந்த விவகாரத்தைக் கையாள்வதற்குக் குழுவொன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் 05▶




‘கிளீன் ஸ்ரீலங்கா’ என்ற கோஷத்தோடு அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசின் மீதும் ‘கிளீன் இல்லாத’ விடயங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் கிளம்பத் தொடங்கி இருக்கின்றன.

ஊழல், மோசடி இல்லாத அரசு இப்போதுதான் அதிகாரத்தில் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா தமது அரசு குறித்து இப்போது புளகாங்கிதத்துடன் - பெருமையுடன் - பெருமிதத்துடன் மெச்சிக் கொள்ளும் அதேசமயம், ஆளும் தரப்பினருக்கு எதிரான குற்றச்சாட்டுகளும் பகிரங்கமாக வெளிவரத் தொடங்கி இருக்கின்றன.

பிரபல சிவில் சமூக செயற்பாட்டாளரான யமுனி கமந்த, ஊழல் - மோசடி தடுப்பு ஆணைக் குழுவின் முன் பிரசன்னமாகி ஆறு முக்கிய அமைச்சர்களின் சொத்துக்கள் குறித்து விசாரணை நடத்தும்படி முறைப்பாடு 05▶

# தமிழரும் முஸ்லிம்களும் இணைந்து செயற்பட்டால்தான் தலைநிமிரலாம்!



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட வேண்டும். அந்த இணைவு எமது தனித்துவ அடையாளங்களை அழித்து விடுவதாக இல்லாமல், மாறாக அவற்றை உறுதி செய்வதாக இருக்க வேண்டும்."

– இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன்.

நேற்று மாலை நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நடத்திய பெருந்தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் 25 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வில் நினைவுப் பேருரை நிகழ்த்துகையிலேயே சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

"ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பெருந்தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் 20 ஆவது நினைவு தினப் பேருரையை 2020ஆம் ஆண்டு சம்மாந்துறையில் நிகழ்த்தியிருந்தேன். இன்று அன்னாரது 25ஆம் ஆண்டு நினைவு தினத்தில் நினைவுப் பேருரை நிகழ்த்துமாறு எனக்கு அழைப்பு விடுத்த ரவூம் ஹக்கீமுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ் – முஸ்லிம் சமூகங்களுக்கு மத்தியில் இன்னமும் பரஸ்பர சந்தேகங்களும் நெருடல்களும் தொடர்ந்தும் நிலவி வருகின்ற காலத்தில் ஐந்து ஆண்டு கால இடைவெளிக்கும் பிறகு இரண்டாவது தடவையாகத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த எனக்கு விடுக்கப்பட்ட இந்த அழைப்பை பெரும் கௌரவமாகவே நான் கருதுகின்றேன். புட்டும் தேங்காய்ப் பூவுமாக வாழ்கின்றோம் என்று மார்தட்டிக் கொள்ளும் நீத்துப் பெட்டி அல்ல, குழல் புட்டு எமது சமூகங்களின் உறவு, என்றுமில்லாதவாறு இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆகையால் அந்தத் தலைப்பிலேயே இந்த நினைவுப் பேருரையை ஆற்றலாம் என்று எண்ணினேன். அதுவே பெருந்தலைவர் அஷ்ரப்புக்குச் செய்யும் உயரிய அஞ்சலியாகவும் கருதுகின்றேன்.

தமிழ் – முஸ்லிம் உறவு என்பது அந்த இரு சமூகங்களுக்கும் உயிர் வாயு



(ஒட்சிசன்) போன்றது. முழு நாட்டின் சூழ்நிலைக்கும் இது பொருத்தமானது என்றாலும், அதன் வெற்றியோ தோல்வியோ கிழக்கிலே, அதுவும் அம்பாறை மாவட்டத்திலேயே நிச்சயப்படுத்தப்படும் என்பதை பெருந்தலைவர் அஷ்ரப் நன்கு அறிந்திருந்தார். தமிழ் பேசுகின்ற முஸ்லிம் மக்களுக்கு தனியான ஓர் அரசியல் அடையாளத்தை ஏற்படுத்திக் கொடுத்தவர் அவர்தான். ஆனால் அதே சமயத்தில் தமிழ் மக்களோடு பின்னிப் பிணைந்த ஓர் அடையாளத்தையே அவர் உருவாக்கிக் கொடுத்தார். அதற்கு இரண்டு அடிப்படைக் காரணங்கள் உண்டு.

ஒன்று – தாய்மொழி என்கின்ற ஆழமான அடையாளம். 'தமிழ் பொதுவுடமை' என்ற கவிதையிலே மார்ட்டின் லூதர் கிங் ஜுப் போல, 'கனவொன்று கண்டேன்..' என்று ஆரம்பித்து எழுதிய கவிதையிலே அஷ்ரப் இதை எவ்வளவுக்கு அழுத்திக் கூறியிருக்கின்றார் என்பது தெரிய வருகின்றது. அது மட்டுமல்ல, தான் ஒரேயொரு ஆங்கிலக் கவிதை எழுதியதாகவும், ஆனால் சமூகத்துடன் எனது தாய் மொழியான தமிழில் தொடர்பு கொள்வது எனக்குப் பெரும் நிம்மதியைத் தருகின்றது என்றும் எழுதியிருக்கின்றார்.

அரசியல் கண்ணாடியூடாகப் பார்த்தாலும் உலகெங்கும் மொழி என்பதே அரசியல் ஆட்புலங்களை நிர்ணயம் செய்கிறது என்பது புலப்படும். உலக வரைபடத்தில் நாடுகளின் அரசியல் எல்லைகளை அவதானித்தால் இது தெளிவாகத் தெரியும். ஐரோப்பா இதற்கு நல்ல உதாரணம். தாய்மொழி அடிப்படையிலேயே சகல நாடுகளும் பிரிந்திருக்கின்றன. தனித்தனி நாடுகளாகப் பிரியாவிட்டாலும், சுவிஸ்லாந்து, பெல்ஜியம், ஸ்பெயின் போன்ற நாடுகளில் சமஷ்டி அலகுகள் மொழி அடிப்படையிலேயே பிரிக்கப்பட்டு உள்ளன. எமது அண்டை நாடான இந்தியாவிலும் மொழிவாரியான மாநிலங்கள் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே ஆட்சி அலகுகள் அமைந்துள்ளன. இதற்கான காரணத்தை இலகுவாகக் கண்டு கொள்ளலாம். சமூக வாழ்விற்கு மொழி இன்றியமையாதது. ஒரு மொழி இல்லாமல் ஓர் அரசியல் அலகாக இயங்க முடியாது. மக்கள் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தி, சம்பாஷித்து, கலந்துரையாடி, தங்களைத் தாங்களே ஆளுவதையே ஜனநாயகம் என்கின்றோம். இதைச் செய்வதற்கு மொழி இன்றியமையாதது. மொழிபெயர்ப்போடு செய்யப்படும் கலந்துரையாடலையும் ஒரே மொழியில் நிகழும் சம்பாஷனையையும் ஒப்பிட முடியாது. அதுவும் ஆட்சி அதிகார விடயங்களில் மொழிபெயர்ப்பில் தங்கியிருப்பது ஆபத்தில் கூட முடியலாம். இலங்கை நாட்டில் இரண்டு தாய்மொழிகள் வழக்கத்தில் உள்ளன. ஆகவே, அரசியல் அலகுகள் சம்பந்தப்பட்ட விடயங்களில் இந்தப் பிரதான பிரிவு முக்கியத்துவம் பெறுகின்றது.

இரண்டாவது – தமிழ் மொழி பேசும் மக்கள் இந்த நாட்டிலே எண்ணிக்கையில் சிறுபான்மையானவர்கள். தமிழ், முஸ்லிம் என்ற இரு சமூகங்களை சேர்த்துக் கணக்கிட்டாலும் பெரும்பான்மை சமூகத்தவர் எம்மை விட எண்ணிக்கையில் மூன்று மடங்கானவர்கள். அப்படியான தொரு சூழ்நிலையில் நாம் கூடியவரை சேர்ந்து இயங்குவதுதான் தமிழ் பேசும் இரண்டு சமூகங்களுக்கும் பாதுகாப்பானது. அப்படியாக நாம் சேர்ந்து இயங்கும்போது எமக்கிடையில் உள்ள வேறுபாடுகளையும் மதித்து அவற்றையும் எமது தனியான அடையாளங்களையும் ஏற்றுக் கொண்டு இயங்க வேண்டும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, இந்த நாட்டின் ஆட்சி முறை சமஷ்டியாக மாற்றப்பட வேண்டும் என்று கோரி தனிக் கட்சியாக உருவெடுத்த போதே 'ஒரு சுயாட்சி தமிழ் அரசும்' ஒரு 'சுயாட்சி முஸ்லிம் அரசும்' நிறுவ வேண்டும் என்று இரண்டு அலகுகளாக எமது கட்சி யாப்பில்

(03ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரும் முஸ்லிம்களும் இணைந்து செயற்பட்டால்தான் தலைநிமிரலாம்!



(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

'நோக்கம்' என்ற தலைப்பின் கீழ் விதி 2 இலேயே கூறியுள்ளது.

சில நாள்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் அமரர் தர்மலிங்கத்தின் நினைவு நாளில் நான் கூறியபடி, 1971ஆம் ஆண்டு அரசியல் நிர்ணய சபையில் எமது கட்சியின் மாதிரி அரசியல் யாப்பை முன்வைத்த போதும் இதே எண்ணத்தின் அடிப்படையிலே ஐந்து சமஷ்டி அலகுகளாக நாடு பிரிக்கப்பட வேண்டும் என்றும், அந்த ஐந்தும் –

1. தெற்கு, மேற்கு பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.
2. வட மத்திய, வட மேல் பிரதேசங் களைக் கொண்ட மாநிலம்.
3. மத்திய பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.
4. வட, வட கிழக்கு பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.
5. தென்கிழக்கு பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.

– என்றும் இருந்ததை நான் நினைவுபடுத்தியிருந்தேன்.

இதே கோட்பாட்டின் அடிப்படையிலே தான் பெருந்தலைவர் அஷ்ரப்புக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் பின்னைய நாள்களில் ஏற்பட்ட இணக்கப்பாட்டின் ஒரு தெரிவாக தென்கிழக்கு அலகு இருந்தது. அதைக் குறித்து அஷ்ரப் தினகரன் வாரமஞ்சரிக்கு 1998ஆம ஆண்டு ஜுலை மாதம் 5ஆம் திகதி கொடுத்த நேர்காணலில் இப்படிக் கூறியிருக்கின்றார்.

அஷ்ரப் 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி மேடைகளிலே 'அண்ணன் அமிர்தலிங்கம் தமிழீழம் பெற்றுத் தராவிட்டாலும் தம்பி அஷ்ரப் அதைப் பெற்றுத் தருவான்' என்று முழங்கியது எவரும் அறிந்ததே. ஆனால், அந்தத் தேர்தல் முடிவுகள், முஸ்லிம் மக்கள் தனி நாட்டுக் கோரிக்கையை ஆதரிக்கவில்லை என்பதை அவருக்கு உணர்த்திய போது அவர் அந்த ஜனநாயகத் தீர்ப்பை ஏற்றுப் பயணிக்க ஆரம்பித்தார். இன்று தமிழ் மக்களும்அவர்களது தலைவர்களும் கூட அதே நிலைப்பாட்டுக்கு வந்திருக்கின்றார்கள். இதிலே விசித்திரமான உண்மையொன்று என்னவென்றால், அந்தத் தேர்தலுக்குப் பின் ஜே.ஆர். ஜயவர்த்தன, தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றி பெற்ற தொகுதிகளில் கிடைத்த வாக்குகள் வடக்கு, கிழக்கில் 50 வீதத்துக்கும் குறைவானதால் தனி நாட்டுக்கான ஆணை கிடைக்கவில்லை என்று கூறியபோது, அமர்தலிங்கம், கிழக்கிலே முஸ்லிம் பெரும்பான்மை தொகுதிகளிலும் புத்தளத்திலும் தமிழர் விடுதலைக் கூட்டணி தோற்றிருந்தாலும், அங்கு பெற்ற 26 ஆயிரத்து 496 மொத்த வாக்குகளையும் சேர்த்து 50 வீதத்தையும் தாண்டியதாகக் காட்டியிருந்தார். இதிலேயும், தொகுதிகளிலே தோற்றிருந்தாலும், அஷ்ரப்பின் பிரச்சாரத்தின் பலனாகவே எமக்கான ஆணையைக் காட்டக் கூடியதாக இருந்தது என்பதை நாம் மறக்கக் கூடாது.

2000 ஓகஸ்ட் 3ஆம் திகதி சந்திரிகா அம்மையார், பெயரில் இல்லாவிட்டாலும்

(04ஆம் பக்கம் பார்க்க)











# தமிழரும் முஸ்லிம்களும் இணைந்து செயற்பட்டால்தான் தலைநிமிரலாம்!




(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளடக்கத்தில் சமஷ்டியை ஒத்த புதிய அரசமைப்பு ஒன்றைப் பிரேரித்த போது, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்கின்ற வரைக்கும் பேசுமாறு பணிக்கப்பட்டு, ஐந்தரை மணி நேரம் அஷ்ரப் உரை யாற்றியமையை எவரும் மறக்க முடியாது. அன்று தமிழர் விடுதலைக் கூட்டணி அதற்கு ஆதரவு வழங்கியிருந்தால் இன்று அப்படியான அர்த்தமுள்ள அதி காரப் பகிர்வு உள்ளடங்களான ஆட்சி முறை இருந்திருக்கும்.

தந்தை செல்வா என்று நாம் அன் போடு அழைக்கும் எமது கட்சியின் ஸ்தா பகத் தலைவர் எமக்கு மட்டும் தலைவர் அல்லர். பெருந்தலைவர் அஷ்ரப்புக்கும் தந்தை செல்வாதான் தலைவர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக இருந்த தொகுதிகளில் முஸ்லிம் வேட்பாளர் களையே நிறுத்துவார்கள். பல தடவை களில் கல்முனை போன்ற தொகுதிகளில் தேசிய கட்சிகளின் இரு முஸ்லிம் வேட்பா ளர்களுக்கு இடையில் பலத்த போட்டி ஏற்பட்டால், எமது கட்சிக்காரர்கள் தந்தை செல்வாவிடம் வந்து இந்தத் தடவை நாம் தமிழர் ஒருவரை நிறுத்தினால் முஸ்லிம் வாக்குகள் பிரியும் போது தமிழர் வெல்ல வாய்ப்பு உண்டு என்று கூறுவார்களாம். ஆனால், அவரோ அதற்கு ஒருபோதும் இணங்கினார் அல்லர். அது முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் தொகுதி. வென்றாலும் தோற்றாலும் ஒரு முஸ்லிமையே நிறுத்த வேண்டும் என்று கூறுவார்.

தமிழ்ப் பேசும் மக்களாக ஒன்றாகப் பயணித்தாலும், இரு சமூகங்களினதும் தனித்துவத்தை மதித்து அதற்கு இடம ளித்து இணைந்து செய்கின்ற பயணமாக அது இருக்க வேண்டும். இணைந்து செயற்படுவது அத்தியாவசியம். ஆனால் அந்த இணைவு பரஸ்பரம் எமது தனி அடையாளங்களை மதித்து அவற்றை வெளிப்படுத்துகின்ற விதமான அலகு களையும் நாம் கட்டமைத்துக்கொள்ள வேண்டும்.

தனியான பிரதிநிதித்துவத்தைப் பற்றிப் பேசும் போது, வெட்டுப் புள்ளியின் விகிதாசாரத்தை 12.5 வீதத்தில் இருந்து 5 வீதமாக மாற்றிய பெருமை முற்று முழுதாக பெருந்தலைவர் அஷ்ரப்பையே சாரும். ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் பேசி, பெரும் அழுத்தம் கொடுத்து அந்த மாற்றத்தை அரசமைப்பில் ஏற்படுத்தி யவர். இது சிறுபான்மைக் கட்சிகளுக்கு மட்டுமல்ல, சென்ற வருடம் வரை சிறு கட்சியாக இருந்த ஜே.வி.பிவுக்கும் பெரும் வரப்பிரசாதமாக இருந்தது. அந்த மாற்றம் ஏற்பட்ட காரணத்தினால்தான் அவர்கள் நாடாளுமன்றத்துக்கு வரவே முடிந்தது. அப்படி உள்நுழைந்தமையால்தான் அவர்கள் இன்று ஆட்சிப்பீடம் ஏறக்கூடிய தாக இருந்திருக்கின்றது.

இந்த விடயத்திலும், வேறு பல விடயங் களிலும் அஷ்ரப் பெரும்பான்மைச் சமூகத்தினரோடு பேரம் பேசுவது குறித்து பல பாடங்களை எங்களுக்குப் புகட்டிச் சென்றிருக்கின்றார். இது விசேடமாக தமிழ் சமூகம் கவனத்தில் எடுக்க வேண்டிய ஒன்று.

எதிர்காலத்தில் தமிழ்ச் சமூகமோ முஸ்லிம் சமூகமோ இலங்கையில் தன்மானத்தோடு தலைநிமிர்ந்து வாழ வேண்டுமானால் நாம் இணைந்துதான் செயற்பட வேண்டும். அந்த இணைவு எமது தனித்துவ அடையாளங்களை அழித்து விடுவதாக இல்லாமல், மாறாக அவற்றை உறுதி செய்வதாக இருக்க வேண்டும். இதற்குப் பெருந்தலைவர் அஷ்ரப்பினதும் இலங்கைத் தமிழரசுக் கட்சியினதும் தீர்க்கதரிசனமான கடந்த காலச் செயற்பாடுகள் எமக்கு முன் மாதிரியாக இருக்கின்றன. அந்த முன் மாதிரிகளைப் பின்பற்றினாலேயே தமிழ் – முஸ்லிம் உறவின் மூலமாக எமது இரண்டு சமூகங்களினதும் இருப்பை நாம் உறுதி செய்வது மட்டுமன்றி, எம்மை நாமே ஆளக்கூடிய ஆட்சி முறையை இந்த நாட்டுக்குள்ளேயே ஏற்படுத்தலாம்." – – என்றார் எம். ஏ. சுமந்திரன்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முஸ்லிம் முழக்கம் மர்ஹூம் ஏ.எல்.அப்துல் மஜீத்தின் "ஓயாத புயலும் சாயாத மரமும்" எனும் நூலும் வெளியீட்டு வைக்கப்பட்டது.

நூலின் முதல் பிரதியை முழக்கம் மர்ஹூம் ஏ.எல்.அப்துல் மஜீதின் மனைவி மற்றும் மகன் ஹக்கானி மஜீத் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

நூலாசிரியர் நபீல் நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பியால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ், கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத் தரணி நிஸாம் காரியப்பர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் அப்துல் வாசித், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ் தௌபீக், தேசிய காங்கிரஸ் தலைவரும் அக்கரைப்பற்று மாநகர மேயருமான ஏ.எல்.எம் அதாவுல்லாஹ், கட்சியின் பொருளாளர் ரஹ்மத் மன்சூர் மற்றும் கட்சியின் தவிசாளர்கள், பிரதித் தவிசாளர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப் பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், கட்சியின் உயர் பீட உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள், ஆதர வாளர்கள், பெருந்திரளான பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.




# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திருக்கிறார்.

அமைச்சர் பிமல் ரத்னநாயக்க, சுனில் வட்டகல, சுனில் ஹந்துன்னெத்தி, நலிந்த ஜயதிஸ்ஸ, வசந்த சமரசிங்க, குமார ஜெயக்கொடி ஆகியோரின் சொத்துகள் தொடர்பிலேயே விசாரணை நடத்தும்படி இப்போது கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

* * *

வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளின் போது முன்னைய காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் மாவட்டங்களில் அடையாளம் கண்டு, முன்னுரிமை வழங்கும்படி பரிந்துரை செய்கின்ற திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது உண்டு. ஆரம்பத்தில் ஓர் எம்.பிக்கு 10 லட்சம் ரூபா திட்டங்கள் என்று தொடங்கிய இந்த ஒதுக்கீடு பிற்காலத்தில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு இரண்டு, மூன்று கோடி ரூபா என்ற அளவு வரை ஒதுக்கீடு சென்றமை நாம் அறிந்ததுதான்.

அதுவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கடைசி ஆண்டில், தம்மோடு அரசியல் ரீதியாக நிலைப்பாடு எடுத்த ஆளும் தரப்பு மற்றும் எதிர்த் தரப்பு எம்.பிக்களுக்கு சில, பல கோடி ரூபாத் திட்டங்களுக்கான பரிந்துரைகளுக்கு அவரால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டமை பெரிய அரசியல் சர்ச்சையாக அப்போது உருவெடுத்தமையையும் நாம் மறந்திருக்க முடியாது.

இந்த அரசு ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்தில் முதலாவது இடைக்கால வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப் பட்டதால் கடந்த தடவை எம்.பிக்களுக்கு இந்த ஒதுக்கீடுகள் கிடைக்கவில்லை.

ஆனால், இனி வரும் அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு எம்.பியின் பரிந்துரைக்கும் மொத்தம் ஒரு கோடி ரூபா வரை நிதி ஒதுக்கீட்டுத் திட்டங்களுக்கு அங்கீகாரம் அளிக்கும் முடிவை நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா எடுத்திருக்கின்றார் எனத் தெரிய வருகின்றது.

ஒரு வகையில் பார்த்தால் இதுவும் கூட அரசியல் நிர்வாக முறைகேடாக அர்த்தப்படுத்தக் கூடியது என்பதை மறுப்பதற்கு இல்லை.

# சம்பத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுஜன பெரமுனவின் முன்னாள் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் சம்பத் மனம்பேரி எனும் நபர் நீதிமன்றத்தில் சரணடைவதற்கு தயாராகவிருப்பதாகச் சட்டத்தரணிகளின் ஊடாக மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கு நேற்று அறிவித்தார்.

தனது சட்டத்தரணிகள் ஊடாக அவர் தாக்கல் செய்திருந்த ரிட் மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் ரொஹாந்த அபேசூரிய மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய நீதிபதிகள் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மித்தெனிய பகுதியில் ஐஸ் போதைப் பொருள் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இரசாயனங்கள் அடங்கிய 2 கொள்கலன்கள் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தமது சேவைபெறுநரை கைது செய்வதற்காகப் பொலிஸார் தேடி வருவதாக மனுதாரர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்தார்.

தனது சேவைபெறுநரின் சகோதரரான பியல் மனம்பேரியைக் கைது செய்து தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் தற்போது விளக்கமறியலில் தடுத்து வைத்துள்ளதாகவும், 78 வயதான அவரின் தந்தை பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளதாகவும் சட்டத்தரணி கூறினார்.

சேவைபெறுநரின் சகோதரர் தடுப்புக் காவலில் கடும் சித்திரவதைக்கு உள்ளாக் கப்பட்டுள்ளதாகவும் சட்டத்தரணி சுட்டிக் காட்டினார்.

விசாரணைகளுக்குத் தேவையான முழுமையான ஒத்துழைப்பை பெற்றுக் கொடுப்பதற்கும் உரிய நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைவதற்கும் சம்பத் மனம்பேரி தயாராகவிருக்கின்ற போதிலும், கைது செய்யப்பட்டதன் பின்னர் தனது சேவைபெறுநரை விசாரணை அதிகாரிகள் சித்திரவதைக்கு உள்ளாக்கும் சாத்தியமுள்ளதாக அச்சம் காணப்படுவதாகவும் சட்டத்தரணி மன்றுக்கு அறிவித்தார்.

தனக்குத் தெரிந்த சகல விடயங்களையும் கூறுவதற்குத் தனது சேவை பெறுநர் தயாராக இருப்பதாகவும் சட்டத்தரணி கூறினார்.

முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதிபதிகள் குழாம், விசாரணைக்கான சந்தர்ப்பத்தில் மனுதாரரான சம்பத் மனம்பேரியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டது.

மனுதாரரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுப்பதற்குத் தமக்குக் கீழுள்ள விசாரணை அதிகாரிகளுக்கு அறிவுறுத்துமாறும் நீதிமன்றம் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டது.

அடுத்த மாதம் 16ஆம் திகதி இந்த மனு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

# நாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றென்றும் நிலைத்திருப்பார்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"கொழும்பில் இருந்து வெளியேறி தங்காலை – கால்டன் இல்லத்துக்குச் சென்றுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அங்குள்ள மக்களுடன் தற்போது மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகின்றார். நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் அவரைச் சந்திக்க வருகின்றனர்.

இந்த அரசு விரும்பியவாறு மஹிந்த ராஜபக்ஷ தற்போது அரச மாளிகையில் இருந்து வெளியேறிவிட்டார். அவர் அரச மாளிகையில் தங்கி இருப்பதுதான் பெரும் பிரச்சினையாக அரசு காண்பித்தது. எனவே, தற்போது மக்களுக்குச் சலுகைகளை வழங்குவதற்குத் தேசிய மக்கள் சக்தி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் பயணத்தை இந்த அரசால் தடுத்து நிறுத்த முடியாது. மக்களிடமிருந்து மஹிந்த ராஜபக்ஷவைப் பிரிக்க முடியாது. புலிப் பயங்கரவாதிகளுக்கு முடிவு கட்டி நாட்டைப் பாதுகாத்த மஹிந்த ராஜபக்ஷ, மக்களின் மனங்களில் என்றென்றும் நிலைத்திருப்பார்."

# வெளிநாடுகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறியவை வருமாறு:-

"இலங்கை அரசமைப்பின் 3 ஆவது உறுப்புரைக்கமைய மக்கள் மீதான மக்கள் இறைமை அதிகாரம் மக்களால் 4 ஆவது உறுப்புரிமையின் ஏற்பாட்டின் பிரகாரம் தேர்தலின்போது நடைமுறைப் படுத்தப்படும்.

வாக்கு அதிகாரம், தேர்தல் சட்டத்துக்கமைய இலங்கையில் வசிக்கின்ற மற்றும் தேருநர் இடாப்பில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள பிரஜைகளுக்கு மாத்திரமே உண்டு.

சமகால தேர்தல் சட்டங்களின்கீழ் வெளிநாடுகளிலுள்ள இலங்கைப் பிரஜைகளுக்கு வாக்களிப்பதற்கான முறைகளோ அல்லது சட்டங்கள் தயாரிக்கப்படவில்லை.

எனினும், இந்தியா, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ் ஆகிய ஆசிய நாடுகள் தமது வெளிநாட்டிலுள்ள பிரஜைகளுக்கு வாக்களிக்கக்கூடிய வகையில் சட்ட ரீதியான மூலோபாயங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கையிலும் அவ்வாறான சட்ட திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, வெளிநாட்டிலுள்ள பிரஜைகளின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காகத் தற்போதுள்ள சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு அல்லது புதிய சட்டத்தைத் தயாரிப்பதற்கான விடயங்களை ஆராய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய தேர்தல்கள் ஆணைக்குழு, வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு, பொதுநிர்வாக, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் ஏனைய ஏற்புடைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் அதிகாரிகளுடன் கூடிய குழுவொன்றை நியமிப்பதற்காகப் பொதுநிர்வாக, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது." – என்றார்.

# நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இணைந்து செயற்படுவோம்!

''எதிர் காலத்தில் தமிழ் சமூகமோ முஸ்லிம் சமூகமோ இலங்கையில் தன்மானத்தோடு தலைநிமிர்ந்து வாழ வேண்டுமானால் நாம் இணைந்துதான் செயற்பட வேண்டும். அந்த இணைவு எமது தனித்துவ அடையாளங்களை அழித்து விடுவதாக இல்லாமல், மாறாக அவற்றை உறுதி செய்வதாக இருக்க வேண்டும்.''

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன்.

முஸ்லிம்கள் தரப்பில் கணிசமான பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகத் தலைவரும், பெருந் தலைவருமான எம்.எச்.எம்.அஷ்ரப்பில் 25 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வில் - முஸ்லிம்கள் மற்றும் அவர்களின் தலைவர்கள் மத்தியில் இருந்தவாறு - இந்தக் கருத்தை வலியுறுத்தி இருக்கிறார் சுமந்திரன்.

தமிழர்களும் முஸ்லிம்களும் பேசும் மொழியினால் ஒரே சமூகமாகக் கணிக்கப்படத் தக்கவர்கள். ஆயினும் இலங்கையில் இரண்டு இனங்களாக தனித்துவத்தோடு - தனித்துவ அடையாளச் சிறப்புகளோடு - வசிப்பவர்கள்.

பௌத்த, சிங்கள பேரினவாதத்தினால் அடக்கப்பட்டு, நசுக்கப்படுகின்ற இலங்கையின் சிறுபான்மை சமூகங்கள் தத்தமது உரித்துகளுக்காகவும், இருப்புக்காகவும், சுதந்திரத்துக்காகவும் தத்தமது வழிகளில் நடத்திய போராட்டங்கள், அவற்றின் விளைவுகள் போன்றவை தமிழர் சமூகத்தையும் முஸ்லிம்களின் சமூகத்தையும் - அவர்கள் ஒரே மொழி பேசுபவர்களாக இருக்கின்ற போதிலும் - எதிரெதிர், முரணியல் நிலைகளில் கொண்டு போய் நிறுத்தி இருக்கின்றன என்பதுதான் யதார்த்தப் புற நிலையாக இருக்கின்றது.

இதிலிருந்து விடுபட்டு, இரண்டு தரப்பினருமே இணைந்து செயல்பட்டால்தான், பொது அடக்குமுறைத் தரப்பான பேரினவாதிகளின் அடக்குமுறைப் பிடியில் இருந்து தத்தமது இனங்களை காத்துக் கொள்ள முடியும் என்ற யதார்த்தத்தை உறைப்பாக உரைத்திருக்கின்றார் சுமந்திரன்.

அஷ்ரப் நினைவு தினத்தில் இந்த இரு இன நல்லுறவு குறித்து சுமந்திரன் கருத்து வெளியிட்டமை சாலப் பொருத்தமானது.

முஸ்லிம்களின் தனித்துவத்துக்காக - அவர்களின் உரித்துகளுக்காக - அவர்களுக்காக - குரல் எழுப்புவதற்கு என முஸ்லிம் காங்கிரஸைத் தோற்றுவித்தவர் அஷ்ரப்.

ஆனால், தமிழர்களின் தேசிய கட்டமைப்பாக நீண்ட காலமாக செயல்பட்டு வரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் புடம் போடப்பட்டவர் அஷ்ரப் என்பது மறக்கத்தக்கது அல்ல.

முஸ்லிம்களின் தனித்துவ நலனைப் பேணுவதற்காக, முஸ்லிம்களுக்கென, தனித்துவமான கட்டமைப்பும் அரசியல் பாதையும் முக்கியம் எனத் தீர்மானித்து, அதை செப்பனிட்ட அஷ்ரப், அதற்காக சகோதரத் தமிழினத்தோடு முரண்டு பிடிக்க வேண்டும், முரணிலைப்பட்டு நிற்க வேண்டும் என்று கருதியவர் அல்லர்.

அவரது காலத்தில் தமிழினத்துக்குத் தலைமை தாங்கிய ஜனநாயக அரசியல் தலைவர்களுக்கு, தமிழினத்தின் உரிமைக்கான போராட்டத்தில் - அதன் நியாயத்தில் - அதன் தார்மீக உறுதிப்பாட்டில் - அஷ்ரப் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தார் என்பது நன்கு தெரியும்.

இப்போது முஸ்லிம் மக்களின் பல கட்சிகளாக உருவெடுத்திருந்தாலும் அவை பெரும்பாலும் அஷ்ரப்பை தங்கள் வழிகாட்டியாக கொண்டு அமைந்தவைதான் என்பது கண் கூடு.

அத்தகைய முஸ்லிம் பெருந்தலைவர் அஷ்ரப் காட்டிய வழியில் தமிழ் - முஸ்லிம் மக்கள் தத்தமது உரிமைகளுக்காக - தங்களது தனித்துவ அடையாளங்களைப் பேணுவதற்காக - இரு தரப்புகளுக்கும் இடையிலான முரண்பாடுகளைக் களைந்து, ஒன்றிணைந்து, செயல்படுவது காலத்தின் கட்டாயமாகும்.

அதனை சரியான இடத்தில், சரியான சமயத்தில், சரியான முறையில் வெளிப்படுத்தியிருக்கிறார் சுமந்திரன்.



# கடந்த 14 நாள்களில் நாட்டிற்குள் 75,358 சுற்றுலா பயணிகள் வருகை

இம்மாதத்தின் முதல் 14 நாள்களில் 75,358 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

இவர்களில் அதிகமானவர்கள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.வருடத்தின் இது வரையான காலபகுதியில் 16,41,881 சுற்றுலாப்பயணிகள் வருகை தந்துள்ளனர்.

# அரச நிறுவனங்களின் ஆவணங்களில் டிஜிட்டல் கையொப்பமிட சந்தர்ப்பம்

அரச நிறுவனங்களில் பொதுமக்கள் ஆவணங்களை சமர்ப்பிக்கும் போது கையொப்பமிடுதல் டிஜிட்டல் மயமாக்கப்படுவதாக பொதுநிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

கிராம உத்தியோகத்தர் முதல் பொதுநிர்வாக அமைச்சு வரை பொது மக்கள் எழுத்துமூல ஆவணங்களை சமர்ப்பிக்கும் போது கையொப்பமிடும் செயற்பாடு டிஜிட்டல் மயப்படுத்தப்படும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது 25 மாவட்ட செயலகங்களிலும் 25 பிரதேச செயலகங்களிலும் இந்த பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.



நாட்டின் ஏனைய பிரதேச செயலகங்களிலும் எதிர்வரும் காலத்தில் இந்த வேலைத்திட்டத்தை செயற்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சந்தன அபேரத்ன குறிப்பிட்டுள்ளார்.




# 8 மாதங்களில் இலங்கை சுங்கத்திற்கு 1,471 பில்லியன் ரூபா வருமானம்

கடந்த 08 மாத காலப்பகுதியில் இலங்கை சுங்கம் 1,471 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளது.

கடந்த மாதத்தில் மாத்திரம் இலங்கை சுங்கத்திற்கு 244 பில்லியன் ரூபாவருமானம்கிடைக்கப்பெற்றுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 200 பில்லியன் ரூபா, ஜூலை மாதம் 231 பில்லியன் ரூபா வருமானமும் ஈட்டப்பட்டுள்ளது



# பருத்தித்துறை நகர் பகுதியில் லஞ்ச் சீற் பயன்படுத்தத் தடை

பருத்தித்துறை நகர் பகுதியில் செயற்பட்டு வரும் உணவு கையாளும் நிலையங்கள் சகலவற்றிலும் எதிர்வரும் ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் லஞ்ச் சீற் பயன்படுத்துவதற்கு தடை விதித்து பருத்தித்துறை நகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

திண்மக்கழிவகற்றல் செயற்பாட்டினை எளிமைப்படுத்துவதுடன் சுற்றுச் சூழலை தூய்மையாக பேணும் செயற பாட்டின் நிமித்தமாக பருத்தித்துறை நகர் பகுதியில் செயற்பட்டு வரும் உணவு கையாளும் நிலையங்கள் சகலற்றிலும் கடந்த செப்ரம்பர் 01 ஆம் திகதி முதல் லஞ்ச் சீற் பயன்படுத்த தடை விதிக்கும் முன்னாயத்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில் உணவு வழங்கலின் போது லஞ்ச் சீற் பாவனையை நிறுத்துவதில் உள்ள இடர்பாடுகள் குறித்து பருத்தித்துறை நகரத்திற்குட்பட்ட உணவக உரிமையாளர்கள் பருத்தித்துறை வர்த்தக சங்கத்திற்கு தெரியப்படுத்தியிருந்தனர். இதையடுத்து வர்த்தக சங்கத்தினரது அனுசரணையில் பருத்தித்துறை நகர சபை தரப்பினால் உணவக உரிமையாளர்களுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடமபெற்றுள்ளது.

பருத்தித்துறை நகர பிதா வின்சன் டி போல் டக்ளஸ் போல் தலைமையில் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் நகர சபை பொது சுகாதார பரிசோகர் தினேஸ் லஞ்ச் சீற் பயன்பாட்டை நிறுத்துவது தொடர்பிலும் அதற்கு மாற்றீடாக வாளை இலை, தாமரை இலை போன்றவற்றை பயன்படுத்ததுவது தொடர்பிலும் தெளிவுபடுத்தியிருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் எதிர்கொள்ளும் நடைமுறை சிக்கல்கள் குறித்து உணவக உரிமையாளர்கள் உள்ளிட்ட வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். இருதரப்பு கலந்துரையாடலின் அடிப்படையில் வரும் ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் பருத்தித்துறை நகரில் உள்ள சகல உணவு கையாளும் நிலையங்களிலும் உணவு உள்ளிட்டவற்றை வழங்கும் போது லஞ்ச் சீற்றை பயண்படுத்துவது இல்லை என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உணவு பொதி செய்யும் போது லஞ்ச் சீற்றுக்கு மாற்று ஒன்றிற்கு தயாராகும் வகையில் மூன்று மாத கால அவகாசம் வழங்குவது எனவும் அதனடிப்படையில் 01.01.2026 முதல் உணவு பொதி செய்வதற்கும் லஞ்சீற் பயன்படுத்த தடை நடைமுறைப்படுத்தப்படும்எனவும்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரை தூய்மையாகவும் சுத்தமான நகராக மாற்றும் செயற்பாட்டில் அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பினை வழங்குமாறு கேட்டுக்கொண்டதுடன், ஒக்டோபர் 01 ம் திகதி மற்றும் 01.01.2026 முதல் நடைமுறைக்கு வரும் லஞ்ச் சீற் தடையை மீறி செயற்படும் உணவு கையாளும் நிலையங்கள் கண்டறியப்படுமானால் முதல் தடவையாக ஐயாயிரம் ரூபாவும், இரண்டாவது தடவையாக பத்தாயிரம் ரூபாவும் தண்டப்பணமாக அறவிடுவது எனவும் மூன்றாவது தடவையாக மீறப்படுவது கண்டறியப்படுமாயின் நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பருத்தித்துறை நகர பிதா வின்சன் டி போல் டக்ளஸ் போல் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின் போது நகர பிதா வி.டக்ளஸ் போல், நகர சபை செயலாளர், நகரசபை உறுப்பினர்கள், நகர சபை பொதுச் சகாதார பரிசோதகர் தினேஸ், பருத்தித்துறை வர்த்தக சங்க நிர்வாகிகள், உணவு கையாளும் நிலைய உரிமையாளர்கள், வர்த்தகர்கள் என பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.










# பருத்தித்துறை ஒருங்கிணைப்புக்குழுவில் முக்கிய விடயங்கள் தொடர்பில் ஆராய்வு

சட்டவிரோத மணல் அகழ்வு பாரிய பிரச்சினையாகி வருவது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒருங்கிணைப்புக்குழு தலைவரால் கேட்கப்பட்டது.

தமக்கு ஆளணி பற்றாக்குறை இருப்பதனால் இந்த விடயத்தில் எதையும் செய்ய முடியாதுள்ளதாகவும், இராணுவத்தினர் அல்லது விசேட அதிரடிப்படையினரது ஒத்துழைப்பு பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் அவர்களை கொண்டு கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கலாம் என பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க தெரிவித்தார்.

பணியிடைநீக்கம் செய்யப்பட்டிருக்கும் பொலிஸார் ஒருவர் சொந்தமாக டிப்பர் வாகனங்களை வைத்துக்கொண்டு வடமராட்சியில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்டு வருகின்றமை தொடர்பில் புகைப்பட ஆதாரங்களை காண்பித்து ஒருங்கிணைப்புக்குழு தலைவரால் சுட்டிக்காட்டப்பட்ட போது அது தொடர்பில் கவனம் எடுப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

பருத்தித்துறை பொன்னாலை வீதி சீரமைக்கப்படாது உள்ள விடயம் பலரால் சுட்டிக்காட்டப்பட்டது. சில இடங்களில் கடந்த வருட இறுதியில் வீதி தாழிறங்கிய நிலையில் கடற்கரை அணைக்கட்டும் பாரிய சேதத்திற்குள்ளானது.

அவை குறித்து சுட்டிக்காட்டப்பட்ட போது வீதி அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட தரப்பினரால் தற்காலிகமாக கருங்கற்கள் போட்டு நிரவப்பட்டிருப்பதாக பதிலளிக்கப்பட்டது.

இதன்போது, இந்த செயற்பாட்டில் காணப்படும் குறைபாடு சுட்டிக்காட்டப்பட்டதுடன் பல இடங்களில் இந்த பருவ மழையின் போது தாழிறங்கி அந்த இடங்கள் உடைந்து விழுந்து கடக்கரை வீதியூடான போக்குவரத்து முற்றாக தடைப்படும் அபாயம் உள்ளமை தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன், பருத்தித்துறை மரக்கறி சந்தை விடயம் தொடர்பில் மக்கள் கருத்து கேட்கப்படாது, புதிய இடத்திற்கு அதனை மாற்றிய விவகாரம் நகர சபை உறுப்பினர்கள் உள்ளிட்டோரால் சுட்டிக்காட்டப்பட்டது.

பருத்தித்துறை நகரசபை ஆட்சி சார்ந்து அரசியல் நோக்கத்தில் இந்த விடயம் கையாளப்படுவதாக ஒருங்கிணைப்புக் குழு தலைவர் உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர்களால் பகிரங்கமாக குற்றம்சாட்டப்பட்டது.

இதனை பருத்தித்துறை நகர பிதா உள்ளிட்ட உறுப்பினர்களால் நேரடியாக மறுக்கப்பட்டது. புதிய மரக்கறி சந்தை கட்டடம் அமைக்கப்பட்ட இடம் பொருத்தப்பாடற்றது எனவும் அதனால் நுகர்வோர், வியாபாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் மக்கள் சார்பில் விளக்கி கூறப்பட்டது.

இருந்த போதிலும் 7 கோடி ரூபா திட்டமாக செயற்பட்டுள்ளதன் காரணமாக அதனை மாற்றாது அங்கு உள்ள குறைபாடுகளை சீர்செய்து கொடுத்து தொடர்ந்து இயங்கச்செய்வது என தீர்மானம் இயற்றுவதாக ஒருங்கிணைப்புக் குழு தலைவர் ஜெ.ரஜீவன் தெரிவித்தார்.

நகர சபை கட்டளை சட்டம் மற்றும் அதிகாரங்களின் அடிப்படையில் பருத்தித்துறை நகரசபையினால் இந்த விடயம் தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை சவாலுக்குட்படுத்தும் வகையில் பிரதேச ஒருங்கிணைப்பு குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டமைக்கு வன்மையான கண்டனத்தை பருத்தித்துறை நகர சபை உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.சுருக்குவலை உள்ளிட்ட தடை செய்யப்பட்ட தொழில்முறைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவது சுட்டிக்காட்டப்பட்டு அதனை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு மீனவர் சங்க பிரதிநிதிகள், மீனவர்களினால் வலியுறுத்தப்பட்டது.







# இ.போ.ச. பருத்தித்துறை சாலையில் சாரதிகளுக்கு பெரும் பற்றாக்குறை

68 சாரதிகள் இருக்க வேண்டிய இடத்தில் 37 சாரதிகள் மட்டுமே ஓய்வின்றி கடமையில் ஈடுபட்டு வருகின்றனர் என இ.போ.ச. பருத்தித்துறை சாலையினர் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை பிரதேச செயலக அபிவிருத்தி குழு கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி ராஜீவன் தலைமையில் பருத்தித்துறை பருத்தித்துறை பிரதேச செயலாளர் ந.திருலிங்கநாதனின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

இதன்போது போக்குவரத்து தொடர்பான விடயம் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, இலங்கை போக்குவரத்து சபையில் 751 தடங்கள் மற்றும் கிளிநொச்சி அறிவியல்நகர் மற்றும் கட்டைக்காடு ஆகிய போக்குவரத்து தொடர்பில் பருத்தித்துறை சாலையினர் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

தனியார் பஸ்கள் சேவை இன்றி இருப்பதாகவும் அவற்றை சேவையில் ஈடுபடுத்தலாம் எனவும் கூறப்பட்டது.

இதன்போது சாலை சார்பில் வருகை தந்தவர், 68 சாரதிகள் இருக்க வேண்டிய இடத்தில் 37 சாரதிகள் மட்டுமே கடமையில் இருக்கின்றனர் எனவும், இதனால் பாரிய சாரதி பற்றாக்குறை காணப்படுவதாகவும் சாரதிகள் தமது கடமைகளை ஓய்வின்றியே நிறைவேற்றி வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பிலிருந்து அதிகாலையில் பருத்தித்துறைக்கு வரும் பஸ் வண்டியே காலையில் கச்சேரி ஊடான யாழ்ப்பாண சேவைக்கும் பயன்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் போது வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு சேவையில் ஈடுபடும் பஸ் வண்டி அடிக்கடி பழுதடைவதனால், அதில் பயணம் செய்யும் மாணவர்கள் நடுத்தெருவில் அந்தரிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது புதிய பஸ் வண்டி ஒன்றை சேவை ஈடுபடுத்தலாம் என கூறப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறை நகரசபைகளின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்கள், பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் மற்றும் தவிசாளர், பிரதேச சபை மற்றும் நகரசபை உறுப்பினர்கள், பொலிஸ் இராணுவ அதிகாரிகள் திணைக்கள தலைவர்கள் சமூக மட்ட அமைப்புக்களின் தலைவர் என பலர் கலந்து கொண்டனர்.



# பருத்தித்துறையில் மீனவரின் தூண்டிலில் சிக்கிய பாரிய சுறா

யாழ். பருத்தித்துறை துறைமுகத்திற்கு அருகாமையில் துண்டில் தொழிலில் ஈடுபட்ட மீனவரிடம் பாரிய சுறா ஒன்று சிக்கியுள்ளது.

இவ்வாறு பிடிபட்ட சுறா மீன் 250 கிலோவுக்கு அதிக எடைகொண்டதாக காணப்பட்டது.இதன் சந்தை மதிப்பு சுமார் இரண்டரை லட்த்திற்கு அதிகம் என மீனவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# உடுவில் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் தவிசாளரின் கோரிக்கையை ஏற்று அவருக்கு முக்கிய இடம்

உடுவில் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா பிரகாஷிற்கு வாய்த்தர்க்கத்தின் பின் தலைவரின் ஆசனத்திற்கு அருகில் அமர ஆசனம் ஒதுக்கப்பட்டது.

உடுவில் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு க்கூட்டத்திற்கு வருகை தந்த உடுவில் பிரதேச சபையின் தவிசாளர் பிரகாஷ் விடுத்த கோரிக்கையை ஏற்று தனக்கு பக்கத்தில் ஆசனத்தை உடுவில் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் பவானந்தராஜா வழங்கினார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:-

நேற்று செவ்வாய்க்கிழமை உடுவில் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் உதவிப் பிரதேச செயலாளர் தலைமையில் ஆரம்பமானது.

இதன் போது கூட்டத்திற்கு வருகை தந்த உடுவில் பிரதேச சபையின் தவிசாளர் பிரகாஷ் தெற்கில் இடம்பெறும் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் அந்த பகுதியின் தவிசாளருக்கு மேல் இருக்கையில் ஆசனம் வழங்கப்படுகிறது.

இலங்கையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் சட்டம் தெற்கிற்கு ஒன்று, வடக்கிற்கு ஒன்றாக இருக்க முடியாது, எனக்கு உரிய ஆசனம் வேண்டும்.- என்றார் அவர்.

இதன்போது பதில் வழங்கிய அபிவிருத்தி குழு தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் பவானந்தராஜா இங்கு எந்த அரசியலும் இல்லை, அபிவிருத்திதான். உங்கள் கோரிக்கையை ஏற்கிறேன் வாருங்கள். - என்றார். இதன் போது கீழ் வரிசையில் அமர்ந் திருந்த தவிசாளர் எழுந்து சென்று அபி விருத்தி குழு தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பவானந்த ராஜாவுக்கு கைகொடுத்து மேல் இருக்கையில் அமர்ந்தார்.

















# கருக்கல் வேளையில் கோட்டைக்கல்லாற்றுக்குள் புகுந்த 4 யானைகள்; மக்கள் அச்சத்தில் ஓட்டம்!

( வி.ரி. சகாதேவராஜா)

நேற்று முன்தினம் அந்திமாலை கருக்கல் வேளையில் மட்டக்களப்பு மாவட்டம் கோட்டைக்கல்லாற்றுக்குள் புகுந்த யானைகளால் மக்கள் பதற்றம் அடைந்து அச்சத்தில் கிலி கொண்டு ஓடினர்.

எங்கிருந்தோ வந்த நான்கு பாரிய யானைகள் வாவியினைக் கடந்து கோட்டைக்கல்லாற்றுக்குள் நுழைந்தன.

நான்கு யானைகள் வந்திருக்கின்ற செய்தி ஊரெல்லாம் பரவ மக்கள் கிலி கொண்டனர். வாவிக் கரையில் உள்ள குடியிருப்பாளர்கள் பாதுகாப்புக் கருதி இடம் பெயர்ந்தனர்.

பலர் வாவியில் தோணியை செலுத்தி யானைகளின் நடமாட்டத்தை அவதானித் தமையுடன் படமும் எடுத்து இருக்கின்றார்கள். வன ஜீவராசிகள் திணைக்கள அலுவலர்களும் நின்றிருந்தனர்.

இரவு முழுவதும் நின்ற யானைகள் காலையில் மகளூர் பக்கம் சென்றன எனக் கூறப்படுகிறது.

இதேபோன்று நேற்று முன்தினம் மாலை சம்மாந்துறை நகரில் யானை ஒன்று புகுந்து பீதியை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.














# ஹட்டன் மாணிக்கப்பிள்ளையார் கோவிலில் இந்த ஆண்டுக்கான தேசியத் தீபாவளி விழா

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள ஹட்டன் மாணிக்கப்பிள்ளையார் கோவிலை மையமாகக் கொண்டு இந்த ஆண்டு தேசிய தீபாவளி விழாவை ஒக்டோபர் 20ஆம் திகதி நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான சிறப்பு கலந்துரையாடல் நேற்று முன் முன்தினம் நுவரெலியா மாவட்ட செயலகத்தில் புத்த சாசனம் மற்றும் மத விவகார அமைச்சின் செயலாளர் டபிள்யூ. பி.சேனாதீர தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆண்டு தேசிய தீபாவளி விழாவை மாணிக்கப்பிள்ளையார் கோவில் மற்றும் ஹட்டன் நகரத்தை மையமாகக் கொண்டு பிரமாண்டமாக நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் குறித்து அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

நுவரெலியா பௌத்த மந்திரின் தலைவரும், நுவரெலியா பிராந்திய புத்தசாசன மண்டலத்தின் பதிவாளருமான்ச் வணக்கத்திற்குரிய கிரியோருவே தீரானந்த தேரர், மகா சங்கத்தினர் மற்றும் இந்து குருக்கள் குழுவினர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்ட செயலாளர் துஷாரி தென்னகோன், புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் எச்.என்.குமாரி, இந்து அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் வை.அனிருத்தன், மேலதிக மாவட்ட செயலாளர்கள், நுவரெலியா மாவட்ட பிரதேச செயலாளர்கள், பாதுகாப்பு படைத் தலைவர்கள், இலங்கை போக்குவரத்து சபை டிப்போ முகாமையாளர்கள், அரச அதிகாரிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.











# கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 12 பிரதிவாதிகளுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல்

## பிணை அனுமதியும் கிடைத்தது

போலி மருந்து கொடுக்கல் – வாங்கல் தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 12 பிரதிவாதிகளுக்கு எதிராக விசேட மூவரடங்கிய மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை நேற்று கையளிக்கப்பட்டது.

நீண்ட விளக்கத்தின் பின்னர் பிரதிவாதிகள் 12 பேரையும் தலா 5 இலட்சம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் தலா 50 இலட்சம் ரூபா பெறுமதியான 2 சரீரப் பிணைகளின் கீழ் விடுவிப்பதற்கு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஹியூமன் இம்யூனோ குளோபுலின் மற்றும் ட்ரிபொப்சிமெப் என அடையாளப்படுத்தி மருந்து அல்லாத வேறு திரவங்கள் அடங்கிய 6 ஆயிரத்து 195 குப்பிகளை சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவுக்கு வழங்கி இலங்கை அரசின் ஆயிரத்து 444 இலட்சம் ரூபாவை மோசடியான முறையில் கையாள்வதற்குச் சதித்திட்டம் தீட்டியமை, குறித்த நிதியைத் தவறான முறையில் பயன்படுத்தியமை தொடர்பில் 13 குற்றச்சாட்டுகள் பிரதிவாதிகள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

மேல் நீதிமன்ற நீதிபதிகளான மஹேன் வீரமன், அமாலி ரணவீர மற்றும் பிரதீப் அபேரத்ன ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

பிரச்சினைக்கு வித்திட்டுள்ள மருந்து நிறுவனத்தின் உரிமையாளர் சுதத் ஜனக்க பெர்னாண்டோ, மருத்துவ விநியோகப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் டாக்டர் கபில விக்கிரமநாயக்க, மருத்துவ விநியோகப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஷாந்தினி சொலமன், மருத்துவ விநியோகப் பிரிவின் கணக்காய்வாளர் நெரான் தனஞ்சய, மருத்துவ விநியோகப் பிரிவின் மொத்த கையிருப்பு கட்டுப்பாட்டாளர் சுஜீத் குமார, சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஸ்ரீசந்திரகுப்த, மருத்துவ விநியோகப் பிரிவின் பிரதி பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேரத் முதியான்சேலாகே தர்மசிறி ரத்ன குமார ஹேரத், முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, அவசர பெறுகை செயன்முறையின் பெறுகை குழு உறுப்பினர் டாக்டர் ஜயநாத் புத்பிட்டிய, சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் சமன் ரத்நாயக்க, மருத்துவ விநியோகப் பிரிவின் பணிப்பாளரான டாக்டர் அரம்பேகெதர துசித்த சுதர்ஷன மற்றும் ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் முன்னாள் தலைவர் விஜித்குணசேகர ஆகியோர் இந்த வழக்கின் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் இந்த வழக்குடன் தொடர்புடைய ஆவணங்களை சிறிய லொறியில் நேற்று கொண்டு வந்திருந்தனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வழக்கின் முதலாவது பிரதிவாதியான சுதத் ஜானக்க பெர்னாண்டோ என்பவரைச் சிறைச்சாலைகள் அதிகாரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

வழக்கின் 9ஆவது பிரதிவாதியான மருத்துவ விநியோகப் பிரிவில் கடமையாற்றிய ஜயனாத் புத்பிட்டிய என்ற வைத்தியர் திறந்த நீதிமன்றத்தில் நேற்று ஆஜராகவில்லை என்பதுடன் மேற்படி பிரதிவாதி வெளிநாடு சென்றுள்ளார் என்று அவர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி குறிப்பிட்டார்.

இதையடுத்து அனைத்து பிரதிவாதிகளுக்கும் திறந்த நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டது.

குற்றப்பத்திரிகைகளைத் தாக்கல் செய்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி ஹிரிஹாகம, பிரதிவாதிகளுக்குப் பிணை வழங்க சட்டமா அதிபர் எதிர்ப்புத் தெரிவிப்பதாகக் கூறினார்.

"வழக்கின் தன்மை மற்றும் வழக்கு தொடர்பில் மக்கள் மத்தியில் உள்ள குழப்பத்தால் இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதிவாதிகளுக்குப் பிணை வழங்க எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம். நீதிபதி அவர்களே, பிரதிவாதிகளுக்கு நீதிவான் நீதிமன்றம் பிணை வழங்கியிருந்தாலும் பிணை சட்டத்தின் பிரகாரம் இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதிவாதிகளுக்குப் பிணை வழங்குவதற்கு குறிப்பிடத்தக்க முக்கிய காரணங்கள் உள்ளதா என்பதை ஆராய வேண்டியுள்ளது." – என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி ஹிரிஹாகம தெரிவித்தார்.

பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணிகளான அனுஜ பிரேமரத்ன, நலின் லத்துவஹெட்டி, பிரியந்த நாவான மற்றும் சரத் ஜயமான்ன ஆகியோர் உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழு பிரதிவாதிகளுக்காக தனித் தனியாகப் பிணை விண்ணப்பத்தை முன்வைத்தனர்.

நீதிவான் நீதிமன்றத்தில் குறிப்பிடத்தக்க விசேட காரணங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு பிணை வழங்கப்பட்டுள்ளதால் பிரதிவாதிகளை இந்தச் சந்தர்ப்பத்தில் மீண்டும் விளக்கமறியலில் வைக்க வேண்டிய தேவையில்லை எனவும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

சட்டமா அதிபர் நாட்டு மக்களையும் பாதிக்கப்பட்ட தரப்பினரையும் பிரதிநிதித்துவம் செய்வதால் நியாயமான வழக்கு விசாரணையை நடத்த வேண்டியது அத்தியாவசியமாகும் என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி ஹிரிஹாகம இதன்போது குறிப்பிட்டார்.

நீதிவான் நீதிமன்றத்தில் பிணை அனுமதி பெறுவதற்காகப் பிரதிவாதிகள் முன்வைத்த விடயங்கள் தற்போது செல்லுபடியாகாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நீண்ட விளக்கத்தின் பின்னர் பிரதிவாதிகள் 12 பேரையும் தலா 5 இலட்சம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் தலா 50 இலட்சம் ரூபா பெறுமதியான 2 சரீரப் பிணைகளின் கீழ் விடுவிப்பதற்கு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

# மோட்டார் சைக்கிள் மோதி வயோதிபப் பெண் மரணம்



மோட்டார் சைக்கிள் மோதி வயோதிபப் பெண் ஒருவர் பலியாகியுள்ளார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு கலஹாவில் இடம்பெற்றுள்ளது.

தெல்தோட்டைப் பகுதியில் இருந்து கண்டி நகர் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள், கலஹா நகரில் உள்ள பாடசாலையொன்றுக்கு அருகாமையில் பாதையைக் கடக்க முற்பட்ட பெண் மீது மோதியுள்ளது.

இதனால் படுகாயமடைந்த 73 வயதுடைய அந்தப் பெண் கலஹா பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கண்டி போதான வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி அவர் நேற்று செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# விபத்தை ஏற்படுத்தி விட்டு நிறுத்தாமல் சென்ற டிப்பர்

## வவுனியா சம்பவத்தில் பெண் படுகாயம்

**(கி.வசந்தன்)**

வவுனியா ஹொரவப்பொத்தானை வீதியில் விபத்தை ஏற்படுத்திய டிப்பர் ஒன்று நிறுத்தாமல் சென்றுள்ளது. இந்த விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து வவுனியா தினச்சந்தைக் கட்டடத்திற்கு முன்பாக உள்ள பாதசாரிகள் கடவைக்கு அருகில் நேற்று இரவு 8.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:–

மோட்டார் சைக்கிளில் சென்ற இந்தப் பெண் புறப்படுவதற்குத் தயாராக வீதியின் கரையில் நின்றுள்ளார். இதன் போது வைத்தியசாலை சுற்றுவட்டத்தில் இருந்து ஹொறவப்பொத்தானை திசை நோக்கி சென்ற டிப்பர் வாகனம் அவரை மோதியுள்ளது.

விபத்தில் அந்தப் பெண் மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கி வீசப்பட்ட நிலையில் காயமடைந்திருந்தார். விபத்தை ஏற்படுத்திய மஞ்சள் வர்ண டிப்பர் வாகனத்தின் சாரதி வாகனத்தை நிறுத்தாமல் சென்றுள்ளார் என விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

# மரத்தில் இருந்து கீழே வீழ்ந்து காயமடைந்த கைதி உயிரிழப்பு



மரமொன்றில் இருந்து கீழே வீழ்ந்து காயமடைந்த கைதி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை சிறைச்சாலையில் உள்ள பாரிய மரமொன்றில் இருந்து கீழே வீழ்ந்து காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த கைதியே சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

களுத்துறை, வஸ்கடுவ பிரதேசத்தைச் சேர்ந்த கைதியே உயிரிழந்துள்ளார்.

இந்தக் கைதி போதைப்பொருள் குற்றம் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

மேற்படி கைதி கடந்த ஜுலை மாதம் 21 ஆம் திகதி சிறைச்சாலையில் உள்ள பாரிய மரமொன்றில் இருந்து கீழே வீழ்ந்து காயமடைந்த நிலையில் நாகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பின்னர் இந்தக் கைதி நாகொடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவிட்டு மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

இதனையடுத்து இந்தக் கைதி மீண்டும் சுகவீனமடைந்த நிலையில் நாகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் களுத்துறை வடக்கு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# இந்திய - இலங்கை உறவை எவராலும் பிரிக்க முடியாது!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

"இந்திய - இலங்கை உறவு பல நூற்றாண்டுகளாகப் பேணப்பட்டு வருகின்றது. அண்டை நாடுகளாகவும் ஒரு குடும்பமாகவும் பிணைக்கப்பட்டுள்ளன. இந்த உறவை எவராலும் பிரிக்க முடியாது."

- இவ்வாறு சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இந்தியாவின் 79 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்காக இலங்கை - இந்திய சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கலாசார நிகழ்ச்சியும் இரவு விருந்தும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் நடைபெற்றது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் தனுஜா ஜா ஆகியோரின் அழைப்பின் பேரில் அமைச்சர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

நமது நெருங்கிய அண்டை நாடான இந்தியாவின் 79 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாட இலங்கை - இந்திய சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் பங்கேற்பதில் மகிழ்ச்சி அடைவதாகவும், இந்திய அரசுக்கும் மக்களுக்கும் தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதாகவும் சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் இந்த நிகழ்வில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சுதந்திர தினம் என்பது சுதந்திரத்தின் கொண்டாட்டம் மட்டுமல்ல, ஜனநாயகம் மற்றும் முன்னேற்றத்தின் மதிப்புகளைப் பாதுகாக்க அயராது உழைத்த மக்களின் ஒற்றுமையை நினைவூட்டுகின்றோம்.

இலங்கையர்களாகிய நாம் இந்தியாவின் சாதனைகள் குறித்து மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்திய - இலங்கை உறவு பல நூற்றாண்டுகளாக பேணப்பட்டு வருகின்றது. இலங்கையும் இந்தியாவும் அண்டை நாடுகளாகவும் ஒரு குடும்பமாகவும் பிணைக்கப்பட்டுள்ளன.

கலாசார நிகழ்ச்சிகள், கல்வி நடவடிக்கைகள் உட்பட பல துறைகள் மூலம் இந்த நட்பைப் பாதுகாப்பதில் இலங்கை - இந்திய சமூகம் மதிப்புமிக்க பங்கைக் கொண்டுள்ளது.

நாட்டில் சவாலான காலங்களில், மனிதாபிமான உதவி மற்றும் ஒத்துழைப்பு வழங்கப்பட்டு ஆதரவை வழங்கியுள்ளது.

நவீன யுகத்தில், இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு பல துறைகளில் பரவியுள்ளது. இலங்கையின் வர்த்தகம் மற்றும் முதலீடு, தொழில்கள் மற்றும் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதில் இந்தியா உறுதியாக உள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பின் மற்றொரு எடுத்துக்காட்டு சுகாதாரப் பராமரிப்பு. கொழும்பில் அப்பலோ வைத்தியசாலைகளை நிறுவுதல் மற்றும் நாட்டில் நன்கொடையாக வழங்கப்பட்ட அம்புலன்ஸ் சேவையைத்தொடங்குதல் உள்ளிட்ட நாட்டின் சுகாதாரப் பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்துவதற்கு இந்திய அரசு தொடர்ந்து ஆதரவளித்து வருகின்றன.

கல்வி மற்றும் கலாசார ஒத்துழைப்பு மற்றும் அரசியல் மற்றும் மூலோபாய உறவுகள், மேலும் உதவித்தொகைகள், பயிற்சித் திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், கலை ஒத்துழைப்புகள், அத்துடன் இந்தியாவின் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை கொள்கை மற்றும் இலங்கையின் பிராந்திய ஈடுபாடுபோன்ற விடயங்கள் மூலம், இலங்கையும் இந்தியாவும் பொதுவான சவால்களை எதிர்கொள்வதில் தோளோடு தோள் நிற்கின்றன.

பிராந்தியத்தின் அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்பை உறுதி செய்யும் பொறுப்பைப் பகிர்ந்து கொள்கின்றன. இந்தியா தனது 79 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் வேளையில், இலங்கை கடந்த காலத்தை மட்டுமல்ல, எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டுள்ளது.

எதிர்வரும் ஆண்டுகளில், வர்த்தகம், கல்வி, சுகாதாரம், தொழில்நுட்பம் மற்றும் கலாச்சார பரிமாற்றம் ஆகிய துறைகளில் நாம் தொடர்ந்து உறவுகளை உருவாக்க வேண்டும். , முக்கியமாக, பல நூற்றாண்டுகளாக நம்மை வழிநடத்தி வரும் நம்பிக்கை, மரியாதை மற்றும் நட்பின் மதிப்புகளை நாம் தொடர்ந்து வளர்க்க வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பம் இந்தியாவின் சுதந்திரத்தைக் கொண்டாடுவது மட்டுமல்ல, இரு நாடுகளுக்கும் இடையிலான நீடித்த நட்பை மீண்டும் உறுதிப்படுத்துவதாகவும், 79 ஆவது சுதந்திர தினத்தன்று, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பிரிக்க முடியாத பரஸ்பர உறவு மற்றும் ஒத்துழைப்புப் பயணத்தில் இந்தியக் குடியரசுக்கு இலங்கை தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

இலங்கை - இந்திய சங்கம் 1949 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான சமூக மற்றும் கலாசார உறவுகளை வளர்ப்பதிலும் மேம்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சி முயற்சிகளில் இந்தியா ஒரு முன்னணி பங்காளியாக உள்ளது. மேலும் இரு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான இன மற்றும் கலாசார உறவுகள் 2 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கும் மேலானவை." - என்றார்.

இலங்கை - இந்திய சங்கத் தலைவர் யமுனா கணேசலிங்கம், செயலாளர் சரவணன் நீலகண்டன், துணைத் தலைவர் ரெங்கநாதன் மற்றும் இலங்கை - இந்திய சங்க உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# தற்போது ஊழலற்ற இலங்கை என ஜனாதிபதி அநுரகுமார பெருமிதம்

## உலக வங்கி பிரதிநிதிகள் பாராட்டு

ஊழலற்ற இலங்கையின் தற்போதைய திட்டங்கள் குறித்து சர்வதேச சமூகத்தைத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அதன் ஊடாக இலங்கைக்குப் புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்கான வாய்ப்பு கிடைக்கும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உலக வங்கி பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள உலக வங்கி குழுமத்தின் தெற்காசிய வலய உப தலைவர் ஜொஹன்னஸ் ஸட் உள்ளிட்ட உலக வங்கி பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்தபோது இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் எதிர்கால வளர்ச்சி இலக்குகளை அடைவதில் உலக வங்கி குழுமம் எவ்வாறு ஆதரவை வழங்க முடியும் என்பது குறித்து விரிவான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

இலங்கையின் தற்போதைய பொருளாதாரத் திட்டத்துக்குப் பாராட்டு தெரிவித்த உலக வங்கி பிரதிநிதிகள், பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்தனர்.

டிஜிட்டல் மயமாக்கல், சுற்றுலா, விவசாயம் மற்றும் உள்கட்டமைப்பு உள்ளிட்ட குறுங்கால நன்மைகள் பெறக் கூடிய துறைகளை அடையாளம் கண்டு அதன் முன்னேற்றத்துக்கு நடவடிக்கை எடுப்பது மட்டுமன்றி வடக்கு மற்றும் கிழக்கின் வளர்ச்சி குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை அரசால் உலக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்று இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

நாட்டுக்குப் புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்குத் தேவையான சட்ட கட்டமைப்பைத் தயாரிப்பதற்கு இலங்கை அரசு தற்போது எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் அதற்கான அரசின் கொள்கைத் திட்டம் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

இலங்கையின் பொருளாதார ஸ்திரத் தன்மையைப் பேணி பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று தெரிவித்த ஜனாதிபதி, சர்வதேச அளவில் ஊழல் நிறைந்த நாடு என்று முத்திரை குத்தப்பட்ட இலங்கை, தற்போதைய அரசால் மேற்கொள்ளப்படும் வெளிப்படையான திட்டத்தின் காரணமாக பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் படிப்படியாக ஸ்திரமடைந்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

உலக வங்கியின் சார்பில் இலங்கை, நேபாளம் மற்றும் மாலைதீவுகளுக்கான உலக வங்கியின் துறைசார் பணிப்பாளர் டேவிட் சிஸ்லன் மற்றும் மாலைதீவு மற்றும் இலங்கைக்கான உலக வங்கியின் பணிப்பாளர் கெவோர்க் சர்க்கிசியன் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இலங்கை அரசின் சார்பில் தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஸல் அபொன்சு உள்ளிட்டோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.














# மருதமுனையில் 'நினைவின் நிகழ்வுகள்' ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக பங்கேற்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் கலாநிதி எம்.எச்.எம். அஷ்ரஃபின் 25 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரப் மற்றும் அண்மையில் வபாத்தான அன்.நஹ்ழா அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் மூத்த உலமாவுமான மர்ஹூம் ஏ.அபூஉபைதா மௌலவி ஆகியோரின் ஞாபகார்த்தமாக ஏற்பாடு செய்யப்பட்ட "நினைவின் நிகழ்வுகள்" ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மருதமுனை மத்திய குழுவின் ஒருங்கிணைப்பில் அந்-நஹ்லா அரபுக் கல்லூரியில் நேற்று நடைபெற்றது.

அரபுக் கல்லூரியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணியும் பதில் நீதிபதியுமான ஏ.எம்.பதுறுத்தீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வரவேற்புரையை கல்லூரியின் செயலாளரும் மருதமுனை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவருமான அஷ் ஷெய்க் அஹமது அன்சார் பழீல் மௌலானா நிகழ்த்தினார். பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தமது உரையில் அபூ உபைதா மௌலவி பற்றியும் மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களின் ஆற்றல், ஆளுமை குறித்தும் விவரித்தார்.

மருதமுனை மத்திய குழுவின் தலைவர் எம்.எச்.எம்.தாஜுத்தீன் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில், அந்-நஹ்ழா அரபுக் கல்லூரி மாணவர்களால் குர்ஆன் ஓதி தமாம் செய்யப்பட்டது. விசேட துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது. கல்லூரியின் முன்னாள் அதிபர் அஷ் ஷெய்க் றிஸ்வி ஹாபிஸ் அவர்களினால் அபூ உபைதா மௌலவி அவர்களின் சேவையை பாராட்டி சிறப்பு ஹஸீதாவும் இங்கு பாடப்பட்டது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை, எம்.எஸ். அப்துல் வாஸித் , கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் றஹ்மத் மன்சூர், கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்களான எம்.எஸ் உமர் அலி, எம்.எஸ்.ஹாரிஸ் நவாஸ், முஸ்தபா சரீப், உள்ளிட்டவர்கள் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், நஹ்லா அரபுக் கல்லூரியின் நிர்வாகத்தினர், உலமாக்கள், ஊடகவியலாளர்கள், ஹாபிழ்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வுகளை சிரேஷ்ட அறிவிப்பாளரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பணிப்பாளருமான பஸீர் அப்துல் கையூம் தொகுத்து வழங்கினார்.










# திலீபனின் தியாகம்...!

**தமிழ் மக்களுக்காக உண்ணா நோன்பு இருந்து தனது உயிரை ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இக் கவிதை பிரசுரிக்கப்படுகிறது.**

ஊரெழு பெற்றெடுத்த பார்த்தீபம்
நல்லூர் முன்றிலில் எழுந்ததோர் வேள்வித்
தீ கருகிப் போனதோர் உன்னத தியாகம்
பசியை வென்ற எங்கள் பாலகனுக்கு
பாரதம் செய்தது மகா பாதகம்!

ஆறு நாள் விரதத்திற்கே வரம் தரும் நல்லூர்
கந்தன் கூட  கண் திறக்கவில்லை
இந்திய வல்லூறுகள் செய்த பொல்லாத சதி
தியாக தீபமொன்றை அணைத்தது
தமிழினத்தை கண்ணீர் சிந்த வைத்தது!

அகிம்சையே அறமென்ற இந்திய தேசம்
ஈழத்தில் செய்த அநியாயத்தால்
வெளுத்துப் போனது அகிம்சை வேஷம்
இது விதி என்பதா அல்லது சதி என்பதா?
கடந்து செல்ல மறுக்கிறது தமிழர் மனசு

தியாக தீபம் திலீபன் தமிழ்
ஈழத்தாய் எல்லோருக்கும் பிள்ளையானவன்
இளையவர் அனைவருக்கும் அண்ணனானவன்
தியாகத்தின் சிகரம் தொட்டவன்
ஈழமண்ணுக்கு இலட்சியத் திலகமிட்டவன்!

அவன் வயிற்றில் பற்றிய தீ தான்
இன்னும் எரிகிறது எங்கள் நெஞ்சிலே
அவன் தாங்கிய விடுதலைத் தாகம் தான்
ஆண்டுகள் முப்பத்தெட்டு கடந்தும்
இன்றும் தணியாத தாகமாய் எம்மிலே!

திலீபனின் தியாகம் ஜெயிக்கட்டும்
பார்த்தீபன் கனவு பலிக்கட்டும்
இதுதான் நம் மனதில் என்றும்
அழியாமல் விதைக்க வேண்டிய
இலட்சிய வார்த்தைகள்...!



-திருமதி நந்தினி குலராஜ்-

# அட்டாளைச்சேனையில் அஷ்ரப் நினைவு நிகழ்வு









**(றிபாஸ்)**

மறைந்த முன்னாள் அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான எம்.எச்.எம். அஷ்ரப்பின் 25 ஆவது வருட நினைவையொட்டி கத்தமுல் குர்ஆனும் துஆப் பிரார்த்தனையும் அட்டாளைச்சேனை கலாச்சார மண்டபத்தில் நேற்று நடைபெற்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான நிஸாம் காரியப்பர், எம்.எஸ்.எம்.வாஸீத் மற்றும் கட்சியின் உயர் பீட உறுப்பினர்கள், பிரதேச சபையின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், மத்திய குழுக்களின் தலைவர்கள், உலமாக்கள், கல்விமான்கள் என விஷேட அதிதிகளாகப் பலர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
வருடாந்தம் முன்னெடுக்கும்
குருதிக்கொடை நிகழ்வு – 2025
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில்
21.09.2025 ஞாயிற்றுக்கிழமை
காலை 09 மணிமுதல்
ஒரு துளி உயிர் தரும்!
உதிரம் கொடுத்து உயிர் காக்கும் உன்னத பணியில் இணைய வாரீர்!!!



# குடியரசு துணைத் தலைவருடன் எடப்பாடி பழனிசாமி சந்திப்பு

## டில்லியில் அமித் ஷாவுடனும் கலந்துரையாடல்

புதிதாக பொறுப்பேற்றுள்ள குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணனை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி டில்லியில் நேற்று சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

குடியரசு துணைத் தலைவராக தமிழகத்தை சேர்ந்த சி.பி.ராதாகிருஷ்ணன் சமீபத்தில் பொறுப்பேற்றார்.

இந்த நிலையில், டில்லியில் உள்ள குடியரசு துணைத் தலைவர் மாளிகையில் சி.பி.ராதாகிருஷ்ணனை, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, கே.பி.முனுசாமி, திண்டுக்கல் சீனிவாசன் மற்றும் அதிமுக எம்.பிக்கள் தம்பிதுரை, சி.வி.சண்முகம், இன்பதுரை, தனபால் ஆகியோர் உடனிருந்தனர்.

இதேவேளை, டில்லி பயணம் மேற்கொண்டுள்ள அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று இரவு உள்துறை அமைச்சர் அமித் ஷாவையும் சந்தித்துப் பேசினார்.

தமிழகத்தில்அ.தி.மு.க.மற்றும்தேசிய ஜனநாயக கூட்டணி விவகாரங்கள் குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினர் என தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக, அ.தி.மு.கவிலிருந்து பிரிந்து சென்றவர்களை ஒருங்கிணைக்க வேண்டும் என கோரிக்கை வைத்ததால், கட்சியிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், சில நாள்களுக்கு முன்பு அமித் ஷாவை சந்தித்திருந்தார்.



அதேபோல எடப்பாடி பழனிசாமி மீதான அதிருப்தியில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டிடிவி.தினகரன் ஆகியோர் தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விலகினர்.

இந்தச் சூழலில், இ.பி.எஸ் – அமித் ஷா சந்திப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

# கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிராக இந்தியை திணிப்பதற்கு முயற்சி

## அமித் ஷாவுக்கு த.வெ.க. கண்டனம்



கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிரான இந்தி மொழியை திணிக்கும் முயற்சியை மத்திய அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும் என உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் கருத்துக்கு த.வெ.க. கொள்கை பரப்பு பொதுச் செயலாளர் அருண் ராஜ் எதிர்வினையாற்றியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “இந்தி மொழி நாளையொட்டி தனது எக்ஸ் தளத்தில் வாழ்த்துச் செய்தியை பதிவிட்டுள்ள ஒன்றிய உள்துறை அமைச்சர், “இந்திய நாட்டின் மொழிகள் மற்றும் பேச்சு வழக்குகளுக்கு இடையே ஒரு பாலமாக இந்தி செயல்படுகிறது. இந்தி மொழி வெறும் தகவல் தொடர்பு ஊடகமாக மட்டுமல்லாமல், தொழில்நுட்பம், அறிவியல், நீதி மற்றும் நிர்வாகத்தின் அச்சாணியாக மாறுவதை உறுதி செய்வதே எங்கள் குறிக்கோள். நாட்டின் குடிமக்களை ஒன்றிணைப்பதில் இந்தி முக்கிய பங்கு வகிக்கிறது அனைத்து மொழிகளையும் இணைத்து வளர்ந்த மொழியியல் ரீதியாக தன்னிறைவு பெற்ற இந்தியாவை உருவாக்குவதில் இந்தி தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கும்” என்று குறிப்பிட்டிருக்கிறார்

மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டிருக்கும் ஒரு தேசத்தில், 22 அலுவல் மொழிகளை கொண்டிருக்கும் அரசு நிர்வாகத்தில் ஒற்றை மொழிக்கு முக்கியத்துவம் கொடுப்பது என்பது சர்வாதிகார போக்காகும். ஒன்றிய அரசு நிர்வாகத்தின் அச்சாணியாக இந்தியை மாற்றுவது லட்சியம் என்று கூறுவது வன்மையாக கண்டிக்கத்தக்கதாகும். பா.ஜ.க. முதன் முதலில் ஆட்சியமைத்ததிலிருந்து ஒரே நாடு ஒரே ரேஷன், ஒரே நாடு ஒரே தேர்தல் என்று பன்முகத்தன்மை கொண்ட நாட்டை ஒற்றை தலைமையில் சுருக்க முயல்கிறது.” என்று குறிப்பிட்டுள்ளார்.





# மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு ஆலைக்கு எதிர்ப்பு; மானாமதுரையில் மக்கள் இணைந்து போராட்டம்

மானாமதுரையில் மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு ஆலைக்கு எதிர்ப்பு தெரிவித்து முற்றுகையிட முயன்ற மக்களை பொலிஸார் தடுத்ததால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. தொடர் கடையடைப்பு, அடுத்தடுத்த மறியலால் ஆலையை நிரந்தரமாக மூட அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சிப்காட்டில் மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு ஆலை அமைக்க கடந்த ஆண்டு பெப்ரவரி 21 ஆம் திகதி கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப்பட்டது. இதற்கு மானாமதுரை மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆலைக்கு எதிராக சூரக்குளம் – பில்லறுத்தான், செய்களத்தூர் ஆகிய 2 ஊராட்சிகளில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டங்களில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

ஆனால், எதிர்ப்பையும் மீறி ஆலை கட்டுமானப் பணி தொடங்கியுள்ளது. இதைக் கண்டித்து அ.தி.மு.க, மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட், நாம் தமிழர் கட்சினர் மற்றும் விவசாய சங்கங்கள் தனித் தனியாக போராட்டம் நடத்தனர். தொடர்ந்து ஆலை கட்டுமானப் பணியை அப்போதைய மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தற்காலிகமாக நிறுத்த உத்தரவிட்டார். ஆனாலும் சில வாரங்களிலேயே மீண்டும் கட்டுமானப் பணியை தொடங்கி, தற்போது முடியும் நிலையில் உள்ளது.

விரைவில் ஆலை திறக்கப்பட உள்ள நிலையில், கடந்த மாதம் அரசியல் கட்சிகள், பல்வேறு அமைப்புகள் இணைந்து, மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு ஆலை எதிர்ப்பு போராட்ட ஒருங்கிணைப்புக் குழுவை ஏற்படுத்தினர். தொடர்ந்து அந்த குழுவினர் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், மாவட்ட ஆட்சியர் பொற்கொடி, எம்.எல்ஏ-க்கள் தமிழரசி, செந்தில் நாதன் ஆகியோரிடம் முறையிட்டனர். அதன் பின்னரும் நடவடிக்கை இல்லாததால், கடையடைப்பு, முற்றுகை போராட்டம் அறிவித்தனர்.

இதையடுத்து, நேற்று முன்தினம் போராட்ட குழுவினரை அமைச்சர், மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சமரசப்படுத்த முயன்றுள்ளனர். இருப்பினும் அதை ஏற்க மறுத்து நேற்று மானாமதுரை முழுவதும் 100 சதவீதம் கடைகள் அடைக்கப்பட்டன.

மார்க்சிஸ்ட், இந்திய கொம்யூனிஸ்ட், பா.ஜ.க, காங்கிரஸ், த.வெ.க, நாம் தமிழர் கட்சி, விசிக உள்ளிட்ட அரசியல் கட்சியினர், வர்த்தக சங்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள், மானாமதுரை நகராட்சி மற்றும் சூரக்குளம் – பில்லறுத்தான், செய்களத்தூர், கல்குறிச்சி, மாங்குளம் உள்ளிட்ட ஊராட்சிகளைச் சேர்ந்த பல ஆயிரம் மக்கள் சிப்காட் வளாகத்தில் உள்ள மருத்துவக் கழிவு ஆலையை முற்றுகையிட ஊர்வலமாக சென்றனர்.

அவர்களை பொலிஸார் தடுப்புகளை வைத்து தடுத்து நிறுத்தினர். போராட்டக் குழுவினர் தடுப்புகளை தள்ளிவிட்டு உள்ளே செல்ல முயன்று ள்ளனர். இதனால் இரு தரப்புக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. பின்னர் அவர்களை சமரசப்படுத்தி, சிலரை மட்டும் பேச்சுவார்த்தைக்கு வட்டாட்சியர் அலுவலகத்துக்கு அழைத்து சென்றுள்ளனர்.

மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் சிவபிரசாத், கோட்டாட்சியர் ஜெ.பி கிரேஸியா, வட்டாட்சியர் கிருஷ்ணகுமார் ஆகியோர் போராட்டக்குழுத் தலைவர் வீரபாண்டி, வர்த்தக சங்கத் தலைவர் பால குருசாமி உள்ளிட்டோரிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதனிடையே 3 மணி நேரத்துக்கு மேலாக பேச்சுவார்த்தை நீடித்ததால் சந்தேகம் அடைந்த மக்கள் சிவகங்கை – மானாமதுரை நெடுஞ்சாலையில் மறியலில் ஈடுபட்டனர். தொடர்ந்து வட்டாட்சியர் அலுவலகம் முன்பும் மறியலில் ஈடுபட்டனர். இதனால், அவ்வழியாக போக்கு வரத்து நிறுத்தப்பட்டு, வேறு வழியில் வாகனங்கள் மாற்றிவிடப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற பேச்சுவார்த்தை முடிவில் மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு ஆலையை மூட அரசுக்கு பரிந்துரை செய்து 2 மாதங்களுக்குள் உரிய உத்தரவை பெற்று தருவது, அதுவரை ஆலை கட்டுமானப் பணியை நிறுத்துவது என முடிவு செய்யப்பட்டது. கட்டுமானப் பணி நடைபெறாமல் இருப்பதை காவல் துறை மூலம் கண்காணிப்பாது எனவும் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து போராட்டத்தை கைவிட்டு மக்கள் கலைந்து சென்றனர்.



# இஸ்ரேல் பிரதமர் மீண்டும் கட்டாரை தாக்க மாட்டார்

## ட்ரம்ப் அறிவிப்பு



இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, மீண்டும் கட்டாரைத் தாக்க மாட்டார் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தனது இரண்டு நெருங்கிய நட்பு நாடுகளான இஸ்ரேலுக்கும் கட்டாருக்கும் இடையிலான பதற்றங்களைத் தணிக்க அமெரிக்கா முயற்சித்து வருகிறது.

இந்தநிலையிலேயே ட்ரம்பின் கருத்து வெளியாகியுள்ளது.

கடந்த வாரம், ஹமாஸ் தலைவர்களை குறிவைத்து, கட்டாரில், இஸ்ரேல் நடத்திய தாக்குதல், வொஷிங்டனின் வளைகுடா நட்பு நாடுகளைக் கோபப்படுத்தியுள்ளது.

இந்தநிலையில், ஜெருசலேமில் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோவிற்கும் இஸ்ரேலியப் பிரதமருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது, ஹமாஸ் மீதான தாக்குதல் மேலும் தொடரும் என நெதன்யாகு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

எனினும், ஓவல் அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், பெஞ்சமின் நெதன்யாகு கட்டாரில் மீண்டும் தாக்குதல் நடத்த மாட்டார் என அறிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ, பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை சந்தித்ததன் பின்னர், கட்டாருக்கு செல்வார் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

# பிரபலமான ஹொலிவுட் நடிகர் ரொபர்ட் ரெட்போர்ட் காலமானார்



பிரபல ஹொலிவுட் நடிகர் ரொபர்ட் ரெட்ஃபோர்ட் தனது 89ஆவது வயதில் காலமானார்.

இவர் 'The Sting" மற்றும் 'Butch Cassidy and the Sundance Kid' ஆகிய திரைப்படங்களில் நடித்துள்ளார்.

யூட்டா மலைப்பகுதியில் உள்ள சண்டான்ஸ் இல்லத்தில் வைத்து அவர் காலமானதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ரொபர்ட் ரெட்ஃபோர்ட் 'Out of Africa' திரைப்படத்திற்காக ஒஸ்கார் விருது பெற்றார்.

இவர் 1980ஆம் ஆண்டு வெளிவந்த 'Ordinary People' திரைப்படத்திற்காக சிறந்த இயக்குநர் பிரிவில் எகடமி விருதை வென்றார்.

2016ஆம் ஆண்டில் தான் "நடிப்பதில் சோர்ந்து விட்டேன்" எனக் கூறிய ரொபர்ட் ரெட்ஃபோர்ட், 2018ஆம் ஆண்டு நடிப்பிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தார்.

# இன்றைய ராசி பலன்கள் -17.09.2025




இன்று சோர்வு மனப்பான்மையும் தேவையற்ற கவலைகளும் காணப்படும். எதையும் இலேசாக எடுத்துக் கொள்வது நல்லது.

பணியில் தவறுகள் செய்ய நேரலாம்.உங்கள் தவறுகளை கண்டுணர்ந்து அதனை சரிசெய்து கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.உங்கள் துணையை புரிந்து கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வது நல்லது.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்காது.தேவையில்லாத செலவினங்களை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையை உருவாக்கும்.

உங்கள் தோள்களில் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




இன்று நீங்கள் நம்பிக்கையான மனநிலை கொண்டிருப்பீர்கள். நீங்கள் உறுதியுடன் இருப்பதன் மூலம் இன்றைய நாளின் சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

இன்று இறுக்கமான பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள். பணியின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது, இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க வாக்கு வாதங்களை தவிர்க்கவும்.அமைதியான சகஜமான அணுகுமுறை மூலம் இனிமையற்ற தருணங்களை தவிர்க்கலாம்.

சிறிது பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகளை தவிர்க்க கட்டுப்பாடுடன் செலவு செய்ய வேண்டும்.

வெந்நீர் குடிப்பதன் மூலம் சளியை தவிர்க்க இயலும். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்க முயலுங்கள்.




இன்று உங்களின் பொறுமை சோதனைக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்படும். நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக போராட வேண்டும்.

பணியிடத்தில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். பணியிடச் சூழலில் காணப்படும் பதட்டமான் நிலைமை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உணரச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான உறவு பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பயணத்தின் போது பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும்போது கவனம் தேவை.

கால் வலி மற்றும் பல் வலி பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




இது உங்களுக்கு சாதகமான நாள். நற்பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் தொடர் முயற்சியால் இது சாத்தியம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இன்றைய நாளை உங்கள் துணையுடன் நெருங்கிப் பழகி கழிப்பீர்கள்.

இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று அதிக பண வரவு காணலாம். அந்தப் பணத்தை நீங்கள் ஆன்மீக நோக்கத்திற்கு பயன்படுத்தலாம்.

இன்று உங்கள் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பரிசோதனைகுள்ளாகும் நாள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு பயனளிக்கும்.

பணியிடச் சூழலில் அசௌகரியம் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனமுடன் இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருக்கும். குடும்பத்திற்காக தேவையற்ற விஷயங்களுக்கு செலவு செய்ய நேரலாம்.

சில அசௌகரியங்கள் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே சிறிது கவனமுடன் இருக்கவும்.




இன்று வருத்தப்படும்படியான சில சூழ்நிலை காணப்படும். நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எளிய அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். விரும்பிய இலக்குகளை அடைவதற்கு திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக கருத்து வேறுபாடு ஏறபட்டு உங்கள் துணையுடன் சூடான விவாதத்தில் கலந்து கொள்வீர்கள்.இத்தகைய போக்கிற்கு இடம் கொடுக்காமல் இருக்க முயலுங்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். இதனால் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பதட்டம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்கள் முயற்சியில் பொறுமையும் உறுதியும் தேவை. உங்கள் முயற்சில் வெற்றி காண உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு நடத்த வேண்டும்.

இன்று கூடுதல் பணிகள் காணப்படும். சக ஊழியர்களின் கடுமையான நிலைப்பாட்டின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

நீங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இதனை தவிர்த்து அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணப்புழக்கம் இன்று சுமூகமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




சுய வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு இன்று சாதகமான நாள். உங்கள் மன உறுதி மூலம் இன்று உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கலாம். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள நேரலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை சிறப்பாக சேமிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம்சிறந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் -17.09.2025




இன்றைய நிகழ்வுகளில் நீங்கள் நடைமுறை அணுகுமுறையை மேற் கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுங்கள். உங்கள் உணர்வுகளை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்துவதன் மூலம் நல்லுறவு வளரும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள். உங்கள் பணத்தை நீங்கள் சிறப்பாக கையாள வேண்டும்.

இன்று மிதமான ஆரோக்கியமே காணப்படும். கால் வலி பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று அர்த்தமுள்ள நாளாக இருக்காது. உங்கள் முயற்சிகள் வெற்றியை அளிக்காது. நீங்கள் அமைதியாகவும் நட்பான அணுகு முறையுடனும் இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை பெற் றுத் தரும்.

பணியிடச் சூழல் சாதகமான பலன்களை அளிக் காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்களின் கடுமையான போக்கு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்வது கடினம். சகஜமான அணுகுமுறையால் நன்மை விளையும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

பதட்டம் காரணமாக கால் வலி மற்றும் முதுகில் விறைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று சில வலுவற்ற சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு முயற்சி செய்தால் நல்ல பலன் கிடைக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திரங்கள் மூலம் நற்பயன் பெறலாம்.

பணியிடத்தில் நற்பலன்கள் காண உங்கள் பணியில் ஒழுங்கு முறையான அணுகுமுறை வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவ லையை ஏற்படுத்தும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந் தது.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இதனால் சிறிது வருத்தம் உங்களிடம் காணப்படும்.

இன்று பதட்டம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்களை மேம்படுத்திக் கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத் திக் கொள்ளலாம். உங்களின் இனி மையான தொடர்பின் மூலம் சாத கமான பலன்கள் சாத்தியம். இன்று உங்களுக்கு சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் செயல் திறன் சாதகமான பலன்களை அளிக்கும். பணி சம்பந்தமான பயணம் காணப்படு கின்றது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இனிமையான வார்த் தைகளால் உங்கள் துணை மகிழ்ச்சியுறுவார். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் அதிக அளவில் காணப்படும். உங்கள் தேவைகள் சமாளிக்க நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். உங்கள் நம்பிக்கை மற்றும் மன திடம் காரணமாக ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




# தியாகி திலீபனுக்கு திருமலையில் அஞ்சலி

**(எஸ்.கீதபொன்கலன்)**

தியாக தீபம் திலீபனின் உருவப் படத்திற்கு திருகோணமலையின் பல பகுதிகளில் நேற்று அஞ்சலி செலுத்தப் பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யால் முன்னெடுக்கப்படுகின்ற தியாக தீபம் திலீபனின் உருவப்படம் தாங் கிய நினைவேந்தல் ஊர்தி நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு திருக் கோணமலையை வந்தடைந்தது.

நேற்றைய தினம் காலை 9 மணிய ளவில் திருக்கோணமலை சிவன் கோயி லடியில் பொது மக்களால் அஞ்சலி சலுத்தப்பட்டு பின்னர் ஊர்தி அங்கி ருந்து புறப்பட்டு, காளி கோவிலடி, திரு கோணமலை மாநகர சபை, தபால் கந் தோர் சந்தி என பல இடங்களில் தரித்து நின்று அஞ்சலி நிகழ்வு முன்னெடுக்கப் பட்டது. இதன்போது பெரும் எண்ணிக் கையான மக்கள் அஞ்சலி செலுத்தி னார்கள்.

பின்னர் ஊர்தி திருக்கோணமலை யில் இருந்து முல்லைத்தீவை நோக்கிப் பயணித்தது.

திருகோணமலை சிவன்கோவிலடி யில் எதிர்வரும் 26ஆம் திகதி வரை தின மும் மாலை 5.30 மணியளவில் திலீப னுக்கான அஞ்சலி நிகழ்வு முன்னெடுக் கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.